Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, பிப்ரவரி 14 2024 | இதழ் 213

# தொகுதி மறுசீரமைப்பைக் கைவிடவேண்டும் மத்திய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு எதிர்ப்பு ஸ்டாலின் தீர்மானங்கள் சட்டசபையில் நிறைவேறியது "அரசியல் சட்டவிரோதம், சாத்தியமில்லை: காமெடிக் கொள்கை; தமிழகத்திற்கு பின்னடைவு"

சென்னை, 14 பிப் 2024: மத்திய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம், தமிழ்நாடு மாநில எம்.பி., எம்.எல்.ஏ. தொகுதி எண்ணிக்கையைக் குறைக்கும் மறுசீரமைப்பு திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்த 2 தனித் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

"இது அரசியல் சட்டவிரோதம், சாத்தியமில்லை; காமெடிக் கொள்கை; தமிழகத்திற்கு பின்னடைவை" ஏற்படுத்தும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

தமிழக சட்டசபை கூட்டத்தொடரின் 3 ம் நாள் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு தொடங்கியது. கேள்வி நேரம் முடிந்ததும் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தினை நடைமுறைப்படுத்த கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தியும், மக்கள் தொகை அடிப்படையில் பார்லிமென்ட் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கையை கைவிடுமாறு கோரியும் இரண்டு தனித் தீர்மானங்களை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

நாட்டையும் நாட்டு மக்களையும் அச்சத்திலும் பதற்றத்திலும் வைக்கும் இரண்டு மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து இந்த மாமன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றியாக வேண்டிய நெருக்கடியான அரசியல் சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

* ஒன்று - 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்கிற மிக மோசமான எதேச்சாதிகார எண்ணமாகும். இதனை நாம் கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

* இரண்டு - 'மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு' என்ற பெயரால் தமிழ்நாட்டின் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கும் சதி, இதனை முறியடித்தாக வேண்டும்.

இவை இரண்டுமே மக்களாட்சியைக் குலைக்கும் செயல்கள் என்பதால் இவை இரண்டுக்கும் எதிராக நாம் அனைவரும் ஒருசேரக் குரல் கொடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது எத்தகைய ஆபத்தானது என்பதை விளக்க விரும்புகிறேன்.

* ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற முறை முற்றிலுமாக நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்று. அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது.

அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள "சுதந்திரமான, நேர்மையான" தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது.

ஒரே நேரத்தில் தேர்தல் என்பது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதாலும் அப்படி கலைப்பது அரசியல் சட்ட விரோதம் என்பதாலும் இந்த நடைமுறையை நாம் எதிர்க்க வேண்டும்.

அனைத்து மாநிலங்களிலும் ஆட்சி அமைந்து ஒன்றியத்தில் அமையும் ஆட்சி கவிழுமானால், அனைத்து மாநிலங்களையும் கலைத்து விட்டு தேர்தல் நடத்துவார்களா?

சில மாநிலங்களில் ஆட்சி கவிழ்ந்து, தேர்தல் நடத்தும் சூழல் ஏற்பட்டால் ஒன்றியத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் தானாக முன்வந்து பதவி விலகுவார்களா?

இதைவிட காமெடிக் கொள்கை இருக்க முடியுமா?

நாடாளுமன்ற, சட்டமன்றத்துக்கு மட்டுமல்ல, உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமா?

நாடாளுமன்றத் தேர்தலையே கூட, ஒரே நாளில் இந்தியா முழுக்க நடத்துவதற்கு தயாராக இல்லாத சூழல்தான் இப்போது இருக்கிறது?

இந்த நிலையில், நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும், 30 மாநில சட்டமன்றத்துக்கும் தேர்தல் நடத்துவது மாயாஜாலமா?

நகராட்சிகளும், பஞ்சாயத்துகளும் மாநில அரசின் நிர்வாக அமைப்புகள் என அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. ஆகவே இவற்றுக்கும் சட்டமன்றம், நாடாளுமன்றத்துடன் தேர்தல் என்பது அரசியல் சட்ட விரோதமானது.



உள்ளாட்சித் தேர்தல் முழுக்க முழுக்க மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருப்பதாகும். அதற்கும் சேர்த்து தேர்தல் நடத்தப் போவதாகச் சொல்வது மாநில உரிமைகளைப் பறிப்பதாகும்.

மாநில உரிமைகள் கூட்டாட்சித் தத்துவம் - அனைவருக்கும் சம வாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் அரசியல் சட்டத்தைச் சிதைக்கவோ, உருமாற்றவோ, விரைவில் மக்களால் நிராகரிக்கப்படவுள்ள நாடாளுமன்ற மெஜாரிட்டி உள்ளோரின் சுயநலத்திற்கு யாரும் பலியாகிவிடக் கூடாது. எனவே நாடாளுமன்றம், சட்டமன்றம், நகராட்சிகள், பஞ்சாயத்து ஆகியவற்றுக்கு "ஒரே நாடு -ஒரே தேர்தல்" என்ற நடை முறையை மிக கடுமையாக எதிர்த்தாக வேண்டும். இரண்டாவதாக தொகுதி மறுவரையறை குறித்த ஆபத்துகளை விளக்க விரும்புகிறேன்.

தொகுதி மறுவரையறை என்ற திட்டத்தில் தென்னிந்திய மக்களை, குறிப்பாக, தமிழ்நாட்டு மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை குறைக்கக்கூடிய ஆபத்து, சூழ்ச்சி இருக்கிறது. இது முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

தமிழ்நாட்டின் மீது, தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (பீமீறீவீனீவீமீ்ணீமீ்வீஷீஸீ) உள்ளது. அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

இந்திய அரசமைப்பின் 82 மற்றும் 170-ஆம் பிரிவுகளின்படி, ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்குப் பிறகும், நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்களில் புதிய இடங்கள் உருவாக்கப்படுகின்றன. ஏற்கனவே உள்ள தொகுதிகளின் எல்லைகள் மறுசீரமைக்கப்படுகின்றன. எல்லை நிர்ணய சட்டத்தின்படி இவை செய்யப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி எல்லை நிர்ணய ஆணையத்தை ஒன்றிய அரசு அமைத்து வருகிறது.

இதுவரை 1952, 1962, 1972 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் எல்லை நிர்ணய ஆணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் 1976- ம் ஆண்டு வரை ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்குப் பிறகும், மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டமன்றப் பேரவை இடங்கள் மறுநிர்ணயம் செய்யப்பட்டு வந்தன.

இவ்வாறு மறுநிர்ணயம் செய்யும்போது, மக்கள்தொகையின் அடிப்படையில் மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைகளின் இடங்கள் குறைக்கப்படுகின்றன. அதாவது 'மக்கள்தொகைக் கட்டுப்பாடு' எனும் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி, மக்கள்தொகையை குறைத்துக் கொள்ளும் மாநிலங்களுக்குத் தரப்படும் தண்டனையாக இது அமைந்துள்ளது.

இதனால் மக்கள்தொகை குறையும். மாநிலங்களுக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் குறையும். மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் ஆர்வம் செலுத்தாத மாநிலங்கள் கூடுதல் பரிசைப் பெறும்; அவற்றுக்கான பிரதிநிதித்துவம் அதிகமாகும்.

இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை நாம் எதிர்த்தாக வேண்டும்.

மக்கள்தொகை குறைவதால் ஜனநாயக உரிமைகள் மாநிலங்களுக்குக் குறையக் கூடாது என்பதால்தான் அரசியலமைப்பில் 42-ஆவது சட்டத் திருத்தம் செய்யப்பட்டது.

2001- ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு வரை, தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வதை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருந்தது. அதுபோலவே, அரசியலமைப்புச் சட்டத்தின் 84- வது திருத்தம் செய்யப்பட்டது. தொகுதிகளின் எண்ணிக்கையில் 2026- ம் ஆண்டு வரை மாற்றம் செய்யப்படமாட்டாது என்றும்,

2026- ம் ஆண்டிற்குப் பிறகு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைகளில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படும் என்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைத்தால், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் பெரும் பின்னடைவைச் சந்திக்கும்.

1971 ம் ஆண்டு தமிழ்நாடும் பீகாரும் கிட்டத்தட்ட ஒரே அளவிலான மக்கள்தொகையைக் கொண்டிருந்ததால் மக்களவையில் கிட்டத்தட்ட ஒரே அளவிலான தொகுதிகளைக் கொண்டிருந்தன.

இன்று தமிழ்நாட்டோடு ஒப்பிடுகையில் பீகாரின் மக்கள்தொகை ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளது. இதனால், ஒன்றிய அரசு மேற்கொள்ள உத்தேசித்துள்ள தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையால் தமிழ்நாட்டில் தற்போதுள்ள மக்களவை, மாநிலங்களவை மற்றும் சட்டப்பேரவை இடங்களின் எண்ணிக்கை பல வடமாநிலங்களின் எண்ணிக்கையை விட விகிதாசாரத்தில் குறைந்து விடும்.

இதனை நினைத்துப் பார்த்தால் அச்சமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற தொகுதிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டின் உரிமைக்காக இவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

மக்கள்தொகை அடிப்படையில் தொகுதியை குறைத்துவிட்டால் உறுப்பினர்கள் எண்ணிக்கைய குறைந்து விடுவார்கள். 39 எம்.பி.கள் இருக்கும் போதே ஒன்றிய அரசிடம் கெஞ்சிக் கொண்டு இருக்கிறோம். இதிலும் குறைந்தால் என்ன ஆகும்?

தமிழ்நாடு, கோரிக்கை வைக்கும் பலத்தை இழக்கும். அதன் சக்தியை இழக்கும். அதனால் அதன் உரிமைகளை இழக்கும். இதனால் தமிழ்நாடு பின்தங்கி விடும்.

எனவேதான் தொகுதி வரையறை - மறுசீரமைப்பு என்ற பெயரால் தொகுதிகளின் எண்ணிக்கையை எந்தச் சூழலிலும் குறைக்கக் கூடாது என்கிறோம்.

மக்கள்தொகைக் குறைந்து விட்டதைக் காரணம் காட்டி, தென் மாநிலங்களுக்குத் தொகுதிகளைக் குறைப்பது தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை பலவீனம் அடையச் செய்யும். எனவே, அனைத்து மாநிலங்களிலும் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்ளும் வரை, தொகுதிகளின் எண்ணிக்கையை இப்படியே தொடரச் செய்வதே சரியாகும்.

இதே போன்ற பாரபட்சம்தான் நிதி ஒதுக்கீட்டிலும், நிதி பகிர்விலும் காட்டப்படுகிறது. மக்கள்தொகையைக் காரணமாகக் காட்டி தென்னிந்திய மாநிலங்களுக்கு வரி வருவாயில் பங்கு குறைந்துவிட்டது.

இந்தியா என்பது பல்வேறு மாநிலங்கள் இணைந்த மாபெரும் நாடு. பல்வேறு மாநிலங்கள் இணைந்த கூட்டாட்சி கூட்டரசு இது. இங்கு எந்த மாநிலமும் பிற மாநிலத்தைவிட உயர்ந்ததோ, முக்கியமானதோ அல்ல, அனைத்தையும் சமமாக நடத்த வேண்டும்.

மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே பிரதிநிதித்துவம் என்று கணக்கிடப்பட்டு, மாநிலங்களுக்கான இடம் ஒதுக்கப்பட்டால், புவியியல், மொழி, பொருளாதார, அரசியல் பின்னணிகளைப் புறந்தள்ளும் செயலாகிவிடும். மக்களாட்சியின் ஆதாரப் பண்பையே அது நாசமாக்கிவிடும். இதனால் ஏற்கனவே கனல் வீசிக்கொண்டிருக்கும் எதிர்ப்புணர்வுகளை மேலும் வளர்ப்பது போலாகிவிடும்.

இந்தியாவின் ஒற்றுமையை இதுநாள் வரை கட்டிக்காத்து வரும் கூட்டாட்சித் தத்துவத்தை மீறும் செயல் எதையும் ஒன்றிய அரசு மேற்கொள்ளக் கூடாது.

அதிக தொகுதிகள் மூலம் ஆதிக்கம் செலுத்துவது கூட்டரசின் தன்மைக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகிவிடும்.

2026- ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கும் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

தவிர்க்க இயலாத காரணங்களினால் மக்கள்தொகையின் அடிப்படையில் சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டிய நிலை ஏற்பட்டால்,

1971 ம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் தற்பொழுது மாநிலச் சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தொடர்ந்து இருக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானத்தை இந்தச் சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த இரண்டு முக்கிய தீர்மானங்களையும் நிறைவேற்றித் தருமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் பின்வரும் தீர்மானங்களை முன்மொழிகிறேன்.

"2026 ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவிருக்கும் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையைக் கைவிட வேண்டும் என்றும் தவிர்க்க இயலாத காரணங்களினால் மக்கள்தொகையின் அடிப்படையில் சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டால், 1971 ம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில் தற்பொழுது மாநிலச் சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ அதே விகிதத்தில் தொடர்ந்து இருக்கும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

மக்கள் நலன் கருதி கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு சமூகப் பொருளாதார வளர்ச்சி திட்டங்களையும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களையும் சிறப்பாக நடைமுறைப்படுத்தியதற்காக, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தண்டிக்கப்பட்டுவிடக்கூடாது என்றும் இந்தப் பேரவை வலியுறுத்துகிறது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"'ஒரு நாடு ஒரு தேர்தல்' என்ற கோட்பாடு மக்களாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்பதாலும்; நடைமுறைக்குச் சாத்தியமில்லாத ஒன்று என்பதாலும்; அது இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வகுக்கப்படாத ஒன்று என்பதாலும்; இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட பரந்து விரிந்த நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள், மாநிலச் சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் பல்வேறு காலகட்டங்களில் மக்கள் பிரச்சினைகளை முன்வைத்தே நடத்தப்படுவதாலும்; அதிகாரப் பரவலாக்கல் என்ற கருத்தியலுக்கு அது எதிரானது என்பதாலும் 'ஒரு நாடு ஒரு தேர்தல்' திட்டத்தினை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஒன்றிய அரசை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மேற்காணும் இரண்டு தீர்மானங்களையும் உறுப்பினர்கள் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு முதலமைச்சர் கூறினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

ஹலோ மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
பிப்ரவரி 14, 2024

# இந்த ஆண்டின் சிறந்த படங்களின் பட்டியலில் "பைரி" இருக்கும்" - சக்தி ஃப்லிம் பேக்டரி சக்திவேலன்

## பதினைந்து ஆண்டுகள் கஷ்டப்பட்டவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு மிகச்சிறந்த படத்தை எடுத்திருக்கிறார்கள்" - சக்தி ஃப்லிம் பேக்டரி சக்திவேலன்




சென்னை, 14 பிப் 2024: வரும் பிப்ரவரி 23 அன்று திரைப்படம் வெளியாக இருக்கும் நிலையில், பைரி திரைப்படத்தின் இசை வெளியீடு மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

பைரி திரைப்படத்தின் இயக்குநர் ஜான் கிளாடி பேசும் போது...

அனைவருக்கும் வணக்கம், பைரி என்பது ஒரு வகை கழுகு இனம். புறாக்களை வேட்டையாடும் குணம் கொண்ட கழுகு இனம் தான் பைரி. இந்த புறா பந்தய கதைக்களன் என்பது என் வாழ்வில் நான் பார்த்து வளர்ந்த வாழ்வியல் சம்பவங்களின் அடிப்படையில் எடுத்தாளப்பட்டிருக்கிறது. குறும்படம் எடுக்க ஆரம்பித்த காலத்தில் இருந்தே கேமராமேன் வசந்த் அவர்கள் எனக்குப் பழக்கம். என் குறும்படத்திலேயே உழைப்பைக் கொட்டி வேலை செய்திருப்பார். அவர் தான் இப்படத்தின் ஒளிப்பதிவையும் செய்திருக்கிறார். இப்படம் உருவாவதற்கு அவர் முக்கிய காரணம். அவருக்கு நன்றி. எடிட்டிங் சதீஷ் செய்திருக்கிறார். நாளைய இயக்குநர் காலத்தில் இருந்தே சதீஷ் பழக்கம். தடம் புகழ் அருண் இசையமைத்திருக்கிறார். இப்படம் ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணம் சையது பிரதர். நாளைய இயக்குநர் காலத்தில் இருந்து அவர் எனக்கு பழக்கம். அவரால் தான் இப்படம் நடந்தது. அவருக்கு நன்றி. பட்ஜெட் பற்றி கவலைப்படாமல் படத்திற்கு பேருதவியாக இருந்து வரும் தயாரிப்பாளருக்கு என் நன்றிகள்.

அதற்கு அடுத்தாக இன்று இந்த விழா நடந்து கொண்டிருக்கிறது என்றால் அதற்கு முழுமுதற்காரணம் சக்தி சார் தான். அனைவருமே படத்தைப் பார்த்து நன்றாக இருக்கிறது என்று பாராட்டினாலும் யாரும் அதை வாங்கி வெளியிட முன்வரவில்லை. எந்தவிதமான சப்போர்ட்டும் கிடைக்காமல் என்ன செய்வது என்று முழித்துக் கொண்டு இருந்தோம். அப்பொழுது தான் சக்திவேலன் சார் இப்படத்தை பார்த்தார். புது இயக்குநர், புது டீம், ஆடியன்ஸுக்கு பரிச்சயமான நடிகர் நடிகைகள் இல்லை என்றெல்லாம் யோசிக்காமல் இப்படத்தை வாங்க அவர் முன் வந்ததால் தான் இன்று எங்களுக்கு இப்படி ஒரு ப்ளாட்பார்ம் கிடைத்திருக்கிறது. படம் கண்டிப்பாக சிறப்பாக இருக்கும். நீங்களும் படம் பார்க்கும் போது அதை உணருவீர்கள் என்று நம்புகிறேன். படத்தில் 950 சிஜி ஷாட்கள் இருக்கின்றன, 4 நிமிடத்திற்கு 75 இலட்ச ரூபாய் செலவாகும் என்றார்கள். ஆனால் சிஜி சேகர் 35 நிமிடத்திற்கு சிஜி ஷாட்களை மிகக் குறைந்த பட்ஜெட்டில் மிக சிறப்பாக வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார் என்பது சிறப்பு. அவர் இல்லை என்றால் இப்படம் இல்லை.

கார்த்திக் பிரசன்னா கொடுக்கப்பட்ட குறைந்த சம்பளத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் சிறப்பாக நடித்துக் கொடுத்தார். அவருக்கு நன்றி. மனோபன் முதலில் பாடல் ஆசிரியராகத் தான் உள்ளே வந்தார். பின்னர் படத்தில் எக்ஸிகியூட்டிவ் புரொடியூஷர் ஆக மாறினார். பத்து நபர்கள் செய்யக் கூடிய வேலையை ஒற்றை ஆளாக செய்து காட்டினார். வசந்த் அண்ணன், சதீஷ், மனோபன், சிஜி ரமேஷ் இந்த நால்வரும் இப்படத்திற்கு மிக முக்கியம். அருண்ராஜ் மிகச் சிறப்பாக மியூசிக் செய்து கொடுத்திருக்கிறார். வில்லுப்பாட்டு பகுதிகளும் பின்னணி இசையும் சிறப்பாக வந்திருக்கிறது. அவருக்கு நன்றி. பைட் மாஸ்டர் விக்கி மாஸ்டர் மூன்று சிறப்பான சண்டைக்காட்சிகளை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார். அவருக்கு நன்றி. படம் சூப்பராக வந்திருக்கிறது. கண்டிப்பாக வெற்றியடையும் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது. வெற்றி விழாவில் சந்திப்போம் என்று உறுதியாகச் சொல்கிறேன். பத்திரிகையாளர்கள் படத்தைப் பாருங்கள். கண்டிப்பாக ஒரு நிமிடம் கூட போர் அடிக்காமல் செல்லும். உங்களுக்கு பிடிக்கும் என்று நம்புகிறேன்.பிடித்திருந்தால் ஆதரவு கொடுத்து தூக்கிவிடுங்கள், இந்த நிகழ்விற்கு வந்திருக்கும் பத்திரிகை நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

ஒளிப்பதிவாளர் வசந்த குமார் பேசும் போது...

வந்திருக்கும் அனைவருக்கும் நன்றி. இயக்குநர் ஜான் சிறப்பாக பேசியிருக்கிறார். படம் சிறப்பாக வந்திருக்கிறது. தியேட்டரில் பிப்ரவரி 23ம் தேதி வருகிறது, உங்கள் அனைவரின் சப்போர்ட்டும் இப்படத்திற்குத் தேவை. படத்திற்கு ஆதரவு தாருங்கள். நன்றி.

பாடலாசிரியர் பொன் மனோபன் பேசும் போது...

அனைவருக்கும் வணக்கம். ஒரு படைப்பு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும். எப்படி உதறினாலும் அது விடாது. சக்தி சார் மற்றும் தயாரிப்பாளரைக் கொண்டு வந்தது போல் என்னையும் அது படத்திற்குள் கொண்டு வந்தது. பைரி படத்தில் பாடல் ஆசிரியராகவும் நிர்வாக தயாரிப்பாளராகவும் பணியாற்றியது மிக்க மகிழ்ச்சி.

எடிட்டர் சதீஷ்குமார் பேசும் போது...

வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். பைரி குழுவினர் அனைவருக்கும் என் நன்றிகள். இப்படத்தில் நான் இருப்பதற்கு காரணமான ஜானுக்கு நன்றி. ஜானை எனக்கு முன்பிருந்தே தெரியும். நாளைய இயக்குநர் காலத்தில் இருந்தே நாங்கள் ஒன்றாக பயணிக்கிறோம். டிகே சார், துரை சார் ஆகியோருக்கு நன்றி. கவிஞர் ப்ரான்சிஸ் கிருபா அண்ணாவிற்கு நன்றி. அவர் இப்படத்தில் முக்கியமான ரோல் செய்திருக்கிறார்.

டிகே சார் இல்லாமல் இப்படம் முடிவடைந்திருக்காது. அவர் எங்களை நம்பினார். இயக்குநரைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால், அவர் நினைத்த விசயம் வரும் வரை விடமாட்டார். கஷ்டப்பட்டு படத்தை எடுத்துவிட்டோம். ஆனால் நாங்கள் புதிய அணியினர். கண்டெண்ட் நன்றாக இருக்கிறது. நடித்தவர்கள் அனைவரும் நன்றாக நடித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, படத்தை பார்த்தவுடன் இப்படத்திற்கு நான் சப்போர்ட் செய்கிறேன் என்று கூறியதோடு, படத்தை பெரிய வெற்றிப்படமாக மாற்ற என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ என்பதை உடனிருந்து அறிவுறுத்திக் கொண்டே இருக்கிறார் சக்திவேலன் சார். அவர் பெரிய நடிகர்களின் படங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில் எங்களின் படத்தையும் முன்னெடுத்துச் செல்லும் அவருக்கு நன்றி.

சிஜி சேகர் பேசும் போது...

எல்லோருக்கும் வணக்கம். இப்படத்தில் நான் பணியாற்ற காரணம் ஜான் பிரதர் மற்றும் சையத் பிரதர். இருவருக்கும் நன்றி. தயாரிப்பாளருக்கு நன்றி. படத்தை தியேட்டரில் சென்று பார்த்து ஆதரவு தாருங்கள்.

நடிகர் கார்த்திக் பிரசன்னா பேசும் போது...

இந்த வாய்ப்பைக் கொடுத்த இயக்குநர் ஜான் அவர்களுக்கு நன்றி. ஒரு நடிப்பு கல்லூரியில் 100 நாட்கள் பாடம் படித்த அனுபவம் கிடைத்தது. சக்திவேலன் சார் அவர்களுக்கு நன்றி. அவருக்கு சினிமா மீது இருக்கும் காதலை புரிந்து கொள்ள முடிந்தது. ஒளிப்பதிவாளர் வசந்த் எனக்கு பல விசயங்களை கற்றுக் கொடுத்திருக்கிறார் இப்படத்திற்கு ஆதரவு தாருங்கள்.

நடன இயக்குநர் ஸ்ரீ கிரிஷ் பேசியதாவது...

பைரி படத்தினை ஏற்கனவே குறும்படமாக செய்திருந்தார்கள். அப்பொழுதே ஜான் அவர்களை எனக்குத் தெரியும். ஆனால் குறும்படம் எடுக்கும் போது இருந்த ஜான் அண்ணன் வேறு, இப்பொழுது இருக்கும் ஜான் அண்ணன் வேறு. ஏனென்றால் படத்தில் எதெல்லாம் நன்றாக இருக்கிறதோ அதற்கெல்லாம் முதற்காரணம் ஜான் அண்ணன் தான். ஏனென்றால் ஒரு கேப்டனாக படத்தில் என்ன வேண்டும் என்பதில் மிகத் தெளிவாக இருந்து தேவையானவற்றை வாங்கக் கூடிய இயக்குநர் அவர். அவருடன் பணியாற்றியது சிறப்பான அனுபவம்.

நடிகர் ஆனந்த் பேசியதாவது...

பத்திரிகை நண்பர்களுக்கும் வணக்கம். முதலில் சையத் அவர்களுக்கு நன்றிகளைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால் கற்று தமிழ் படத்தில் நான் கதாநாயகிக்கு மாமனாக நடித்திருப்பேன். அதைப் பார்த்துவிட்டே என் குறும்படத்தில் நடிக்க வேண்டும் என்று கூறினார். அப்படி சொன்னது மாதிரியே என்னைக் கூப்பிட்டு நடிக்க வைத்திருக்கிறார். கேமராமேன் இப்படத்திற்கு மிகச் சிறப்பான ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார். அவருக்கு நன்றி. சக்தி ஃபிலிம் பேக்டரி படம் ரிலீஸ் செய்யப் போகிறது என்கின்ற தகவல் கிடைத்ததும் மிகுந்த நம்பிக்கை வந்துவிட்டது. மிகப்பெரிய உழைப்பை ஒவ்வொரு தொழில்நுட்பக் கலைஞரும் இயக்குநரும் கொடுத்திருக்கிறார்களே, இப்படம் என்ன ஆகப் போகிறது என்று கவலையாக இருக்கும். இனி அந்த கவலை இல்லை. நடிகர் ரமேஷ் ஆறுமுகம் பேசும் போது...

இந்த படத்திற்கு இயக்குநர் ஜான் எவ்வளவு கஷ்டப்பட்டாரோ, அதே அளவிற்கு சையத் கஷ்டப்பட்டு அர்ப்பணிப்போடு இப்படத்தில் நடித்திருக்கிறார். தயாரிப்பாளர் துரை சாருக்கு மிக்க நன்றி, சக்தி சாரின் பல படங்களை நாம் பார்த்திருக்கிறோம். அவை எல்லாமே நன்றாக இருக்கும் என்று தெரியும். அது போல் இப்படமும் கண்டிப்பாக நன்றாக இருக்கும்.

நடிகை விஜி சேகர் பேசியதாவது,

அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னர் சில படங்களில் நடித்திருந்தாலும் கூட இப்படம் எனக்கு ஒரு அடையாளம் கொடுக்கும் என்று நம்புகிறேன். ஒரு குறும்படத்தில் நடித்திருந்ததைப் பார்த்துவிட்டு என்னை அணுகி நான் படம் எடுக்கும் போது கண்டிப்பாக கூப்பிடுவேன் என்று இயக்குநர் ஜான் கிளாடி கூறினார். அது போல் கரெக்டாக என்னை கூப்பிடவும் செய்தார். வாய்ப்பு கொடுத்த அனைவருக்கும் நன்றி. பத்திரிகை நண்பர்கள் இப்படத்திற்கு ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடிகை சரண்யா ரவிச்சந்திரன் பேசும் போது...

நான் இப்படத்தில் சித்ரா என்கின்ற கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறேன். எங்கள் குழுவினர் சார்பாக நான் தயாரிப்பாளர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். சக்தி பிலிம் பேக்டரி மூலம் இப்படம் வெளியாக இருப்பது மிகுந்த சந்தோசம் கொடுக்கிறது. படத்தில் நடித்த சக நடிகர் நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும். பத்திரிகையாளர்கள் அனைவரும் இப்படத்திற்கு வரவேற்பைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நடிகை மேக்னா எலன் பேசும் போது...

என்னை இரண்டு முறை ஆடிஷன் எடுத்து எனக்கு இப்படத்தில் நடிக்க நல்ல வாய்ப்பைக் கொடுத்த இயக்குநர் ஜான் அவர்களுக்கும் தயாரிப்பாளர் துரை அவர்களுக்கும், இப்படத்தை வெளியிடவிருக்கும் சக்திவேலன் சாருக்கும், இப்படத்திற்கு ஆதரவு கொடுக்கப் போகும் பத்திரிகையாளர்களுக்கும் மிக்க நன்றி.

நிர்வாகத் தயாரிப்பாளர் தினேஷ் பேசும் போது...

முதல் நன்றியை சையத் அவர்களுக்குத் தான் தெரிவிக்க வேண்டும், அவர் எனக்கு 15 வருடப் பழக்கம். இப்படத்தைப் பார்த்த அனைவரும் படத்தைப் பாராட்டினார்கள், ஆனால் எல்லோருமே புதிதாக இருப்பதால் எப்படி கமர்ஷியலாக வொர்க் அவுட் ஆகும் என்று சந்தேகித்தார்கள். ஆனால் சக்தி சார் இப்படத்தைப் பார்த்துவிட்டு கண்டிப்பாக நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நம்பிக்கை கொடுத்ததும் தான் சந்தோஷம் வந்தது. இயக்குநர் ஜான் இப்படத்தை சிறப்பாக உருவாக்கியுள்ளார். ஒளிப்பதிவாளர் வசந்த்குமார் பட்டப்பிடிப்பில் பெரும் உதவி செய்தார். அவருக்கு நன்றி. சிஜி சேகர் மிகச் சிறப்பான ஒத்துழைப்பை இரவு பகல் பாராமல் செய்து கொடுத்தார். அவருக்கு நன்றி. ஸ்ரீ மி தொழில்நுட்பக் கலைஞர் ஸ்ரீக்கும் நன்றி. பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் இருந்து வரும் படங்களை நாம் வெற்றிப்படமாக்கி இருக்கிறோம். பைரி நம் ஊரின் கதை. மக்கள் அதை கண்டிப்பாக வெற்றியடையச் செய்வார்கள் என்று நம்புகிறேன். பத்திரிகை நண்பர்கள் படத்திற்குப் பெரிய ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடலாசிரியர் மோகன்ராஜா பேசும் போது...

பைரி படத்தில் நீ பார்க்கும் பார்வை என்கின்ற பாடலை எழுதி இருக்கிறேன். பாடல் வெளியாகிவிட்டது. நல்ல விதமாக எல்லோரும் எழுதி வருகிறார்கள். இப்படம் மிகப்பெரிய வெற்றி அடையும் என்று நம்புகிறேன்., ஊடக நண்பர்கள் இப்படத்தை வெற்றிப்படம் ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

யாத்திசை பட இயக்குநர் தரணி ராசேந்திரன் பேசும் போது...

அனைவருக்கும் வணக்கம். பைரி என்கின்ற திரைப்படம் எனக்கு முதன் முதலாக சக்திவேலன் சார் அவர்கள் மூலமாகத் தான் அறிமுகமானது. நான் அவரை பார்க்கும் போதெல்லாம் அப்படத்தினைப் பற்றிப் பேசுவார். இயக்குநர் பேசும் போது வெகுளியாகப் பேசினார். ஆனால் அவருடைய படமும், அந்த கிராப்டிங்கும், அவர் ப்ரேமை கட்டமைத்த விதமும், அதில் கதாபாத்திரங்களை நடிகர்களை கையாண்ட விதமும் மிகச் சிறப்பாக ஆச்சரியப்பட வைக்கிறது. ஒரு படத்தை ஆடியன்ஸுக்கு நெருக்கமாக மாற்றுவது என்பது ஒர் தொழில்நுட்பம் சார்ந்த அறிவு. இது வெறும் புறா சண்டையாக நின்று போவதில்லை. அதனையும் மீறி மனிதர்களின் உணர்வு, அரசியல், அந்த சமூகத்தின் அரசியலைப் பேசுகிறது. புதுப்பேட்டை, ஆடுகளம் படங்களைப் போல் பைரி திரைப்படம் இருக்கும். இன்னும் சொல்லப் போனால் இந்த வருடத்தின் மிகப்பெரிய சம்பவமாக பைரி இருக்கும். இவ்வருடத்தின் மிக முக்கியமான படங்களில் பைரி கண்டிப்பாக இருக்கும் என்று நம்புகிறேன்.

நாயகன் சையத் மஜீத் பேசும் போது...

நான் கடந்த 14 ஆண்டுகளாக சினிமாவில் இயங்கி வருகிறேன். நாளைய இயக்குநர் துவங்கி பல குறும்படங்களில் நடித்து இருக்கிறேன். பல மேடைகள் பார்க்கும் போது எனக்கு மிக ஏக்கமாக இருக்கும். அந்த ஏக்கம் எனக்கு நீங்கிய நாள் கண்டிப்பாக இது தான் என்று சொல்வேன். இதற்கு நான் முதலில் நன்றி சொல்ல வேண்டியது தயாரிப்பாளர் டி.கே அவர்களுக்குத் தான். அவருக்கு அடுத்து நான் நன்றி சொல்ல நினைப்பது சக்தி அண்ணனுக்குத் தான். அவர் இன்றி எங்களுக்கு இந்த அடையாளம் கிடைத்திருக்காது. முதன் முதலாக படத்தைப் பார்த்த சக்தி அண்ணன் என்னைக் கட்டிப் பிடித்து "நீ பின்னிட்ட" என்று வாழ்த்தினார். அப்பொழுது தான் எனக்கு உயிரே வந்தது.

இயக்குநர் ஜான் குறும்படம் எடுக்கத் துவங்கிய போதிலிருந்தே நாங்கள் இணைந்து பயணித்து வருகிறோம். இப்படத்திற்காக அசுரத்தனமான உழைப்பைக் கொட்டியிருக்கிறார் இயக்குநர் ஜான். அவர் தொடர்ச்சியாக ஒரு மணி நேரம் தூங்கி நான் பார்த்ததில்லை. இப்படத்தின் வெற்றி இயக்குநர் ஜான் அவர்களுக்கு இன்னும் மிகப்பெரிய படங்களை கொண்டு வரும் என்று நம்புகிறேன்.

தயாரிப்பாளர் துரைராஜ் பேசும் போது...

எல்லோருக்கும் வணக்கம். நான் பேச வேண்டியதில் பாதியை சையத்தும் மீதியை இயக்குநர் ஜான் அவர்களும் பேசிவிட்டார்கள் ஒன்று சொல்லலாம். சினிமாவையே பார்க்காத என்னை இவர்கள் ஒரு தயாரிப்பாளராக ஆக்கிவிட்டார்கள். சக்திவேலன் எங்கள் படத்தை நம்பி வெளியிட வந்திருக்கிறார்கள். அவருக்கு நன்றி. பத்திரிகையாளர்களாகிய நீங்கள் தான் இப்படத்தை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

சக்தி ஃபிலிம் பேக்டரி சக்திவேலன் பேசும் போது...

நான் இப்படத்திற்கு அடையாளம் கொடுக்கவில்லை. பைரி திரைப்படம் தான் எங்கள் சக்தி ஃபிலிம் பேக்டரிக்கு அடையாளமாக மாற இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். கண்டிப்பாக இந்த ஆண்டிற்கான வெற்றிப்படங்கள் மற்றும் சிறந்த படங்கள் என்று ஒரு பட்டியல் எடுத்தால் அதில் கண்டிப்பாக "பைரி" இருக்கும். பதினைந்து வருடமாக கஷ்டப்பட்ட அத்தனை பேரும் சேர்ந்து ஒரு நல்ல படத்தை எடுத்திருக்கிறார்கள். பைரி படத்தின் வெற்றியை சத்தம் போட்டு சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# போயிங் பல்கலைக்கழகத்தின் புத்தாக்கத் தலைமைத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் 2023-24 வெற்றியாளர்களை போயிங் அறிவித்துள்ளது




சென்னை, 14 பிப் 2024: போயிங் இன்று அதன் போயிங் பல்கலைக்கழக புத்தாக்கத் தலைமைத்துவ மேம்பாடு திட்டம் 2023-24 மூன்றாம் பதிப்பின் வெற்றியாளர்களை அறிவித்துள்ளது. பல்கலைகழக மாணவர்கள் மற்றும் ஆரம்ப கட்ட ஸ்டார்ட்-அப் தொழில்முனைவோர் அடங்கிய ஏழு அணிகள் வெற்றியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஐ ஐ டி டெல்லியின் ஃபவுண்டேஷன் ஃபார் இன்னோவேஷன் அண்ட் டெக்னாலஜி டிரான்ஸ்ஃபர், அபியோம் ஸ்பேஸ்டெக் மற்றும் டிஃபென்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கிரீன் ஏரோ புரொபல்ஷன் பிரைவேட் லிமிடெட், சொசைட்டி ஃபார் இன்னோவேஷன் அண்ட் என்டப்ரெனூர்ஷிப் (எஸ் ஐ என்ஈ) - ஐ ஐ டி மும்பையின் குளோவாட்ரிக்ஸ் பிரைவேட் லிமிடெட், ஐஐடி மெட்ராஸ் இன்குபேஷன் செல்லின் டிவெர்ஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், பேக்யார்ட் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், பி ஓ என் வி டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் மற்றும் புவனேஸ்வர் கே ஐ ஐ டி-ன் டெக்னாலஜி பிசினஸ் இன்குபேட்டரின் (டி பி ஐ) கொராஷியா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய ஏழு அணிகள் இதில் வெற்றி பெற்றுள்ளன. இந்த வெற்றியாளர்களுக்கு போயிங் மற்றும் அந்தந்த இன்குபேட்டர் பார்ட்னர்கள் சில மாதங்களுக்கும் மேலாக அவர்களின் யோசனைகளை சந்தைக்கு தயாரான மற்றும் சாத்தியமான வணிக தீர்வுகளாக உருவாக்க உதவுவார்கள்.

கர்நாடகா மாநில மின்னணு மேம்பாடு கார்ப்பரேஷன் லிமிடெட் தலைவரும் கர்நாடகா சட்டமன்ற உறுப்பினருமான திரு.ஷரத் குமார் பச்சே கவுடா; ஸ்ரீ சி பி அனந்தகிருஷ்ணன், சி எம் டி, எச் ஏ எல்; இந்திய ஏரோநாட்டிக்கல் சொசைட்டியின் தலைவர் டாக்டர். ஜி. சதீஷ் ரெட்டி (முன்னாள் செயலாளர் டி டி ஆர்&டி, டி ஆர் டி ஓ தலைவர் மற்றும் ரக்ஷா மந்திரியின் அறிவியல் ஆலோசகர்), டாக்டர். வினோத் குமார், இன்-ஸ்பேஸில் உள்ள விளம்பர இயக்குநரகம், விண்வெளித் துறை, உடன் போயிங் தலைமைத்துவம் மற்றும் ஏழு இன்குபேட்டர் கூட்டாளர்களுடன் இணைந்து பெங்களூருவில் உள்ள புதிய போயிங் இந்தியா இன்ஜினியரிங் & டெக்னாலஜி சென்டர் (பைடெக்) வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இறுதி நிகழ்வில் வெற்றியாளர்களுக்கு விருது வழங்கப்பட்டது.

“பில்ட் ஆனது, நாட்டின் இளம் தொழில்முனைவோர் மனதை வளர்ப்பதற்கும், செயல்பாடுகளை அதிகரிக்கவும், அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்கவும், நாட்டை மட்டுமல்ல, நாட்டையும் பாதிக்கும் யோசனைகளை செயல்படுத்த உதவுவதன் மூலம் நாட்டின் இளம் தொழில் முனைவோர் மனதை வளர்க்கும் ஒரு லட்சிய மற்றும் ஆற்றல்மிக்க தொடக்கத் தளமாக உருவாகியுள்ளது. உலகம் முழுவதும். இந்த ஆண்டுகளில் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக வழிநடத்தியதற்காக எங்கள் இன்குபேட்டர் கூட்டாளர்களை நான் வாழ்த்த விரும்புகிறேன், மேலும் இந்த ஆண்டு வெற்றியாளர்கள் மற்றும் விண்ணப்பதாரர்கள் செயலில் பங்கேற்றதற்காக வாழ்த்த விரும்புகிறேன்,” என்று போயிங் இந்தியாவின் தலைவர் சலில் குப்தே கூறினார். "எங்கள் தொழில்துறை-கல்வி ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மை மூலம் நாட்டின் பிரகாசமான திறமை மற்றும் யோசனைகளை வளர்ப்பதன் மூலம் புதுமைகளை வளர்ப்பதில் நாங்கள் தொடர்ந்து உறுதியாக இருக்கிறோம்" என்று குப்தே மேலும் கூறினார்.

இந்த ஏழு குழுக்கள் ஒவ்வொன்றும் நிதி மானியமாக ரூ. 10 லட்சம் பெற்றன, மேலும் அவர்களின் யோசனைகள் சமூக மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் விண்வெளித் தொழில் மற்றும் நிலைத்தன்மைக்கான தீர்வுகளை உள்ளடக்கியது.

அதன் மூன்றாவது பதிப்பில், போயிங், எஸஐஎன்ஈ- ஐ ஐ டி மும்பை, எஃப் ஐ ஐ டி- ஐ ஐ டி டெல்லி, புதுமை மற்றும் தொழில் முனைவோர் மையம் - ஐ ஐ டி காந்திநகர், ஐ ஐ டி மெட்ராஸ் இன்குபேஷன் செல், சொசைட்டி ஃபார் இன்னோவேஷன் அண்ட் டெவலப்மென்ட் - ஐ ஐ எஸ் சி பெங்களூரு, டி-ஹப் ஆகிய ஏழு இன்குபேட்டர்களுடன் தொடர்ந்து பங்குதாரர்களாக உள்ளது. ஹைதராபாத், மற்றும் டி பி ஐ - கே ஐ ஐ டி புவனேஷ்வர், இந்தியாவில் பில்ட் ஐ ஏற்பாடு செய்ய. விண்வெளி மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்ப தொடக்கம், சமூக தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகிய துறைகளில் யோசனைகளை சமர்ப்பிக்க விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டனர்.

போயிங் இந்தியா இன்ஜினியரிங் & டெக்னாலஜி சென்டரின் துணைத் தலைவர், நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர் அகமது எல்ஷெர்பினி அவர்கள், "ஒவ்வொரு ஆண்டும், பில்ட்க்கான யோசனைகளை நாங்கள் சமர்ப்பிக்கக் கேட்கும்போது, இந்த இளம் மனதுகள் மற்றும் அவர்களின் யோசனைகள் கொண்டு வரும் சாத்தியக்கூறுகள் குறித்து நாங்கள் உற்சாகமாக இருக்கிறோம். ஒவ்வொரு யோசனையையும் ஒரு சாத்தியமான வணிக தீர்வாக மாற்றுவதற்கான முழு செயல்முறையும் எங்கள் பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், கூட்டாளர் காப்பாளர்கள் மற்றும் மாணவர் மற்றும் தொடக்க சமூகம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளின் மூலம் வழங்கப்படுகிறது. வழிகாட்டுதல், வளங்கள் மற்றும் சரியான நெட்வொர்க்குகளுக்கான அணுகல் ஆகியவை இந்த ஸ்டார்ட்-அப்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் வளர்ச்சியைத் தூண்ட உதவுகின்றன.

2023 ஆம் ஆண்டில், பில்ட் ஆனது இந்தியா முழுவதும் உள்ள 1, 2 மற்றும் 3 நகரங்களில் இருந்து 2200 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஸ்டார்ட்-அப் பங்கேற்பாளர்களால் 1200 க்கும் மேற்பட்ட யோசனைகளை சமர்ப்பித்ததன் மூலம் பதிவுசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஈர்த்தது. கடுமையான மதிப்பீட்டு செயல்முறையைத் தொடர்ந்து, 75 பட்டியலிடப்பட்ட குழுக்கள் பிராந்திய துவக்க முகாமில் நுழைந்தன, இதில் பிராந்திய மற்றும் தேசிய இறுதிப் போட்டியாளர்கள் தொடக்க சுற்றுச்சூழல் நிபுணர்கள், இன்குபேட்டர் பங்காளிகள் மற்றும் போயிங் பொறியாளர்களிடமிருந்து யோசனைகளை அடைவதற்கான வழிகாட்டுதலைப் பெற்றனர். பங்கேற்பாளர்கள் போயிங்கின் கண்டுபிடிப்புச்சூழல் அமைப்புக்கான அணுகலைப் பெற்றனர்.

பல ஆண்டுகளாக, ஹொரைஜான்எக்ஸ் இந்தியா இன்னோவேஷன் சேலன்ஜ், ஆக்சிலரேட்டட் ஏர்கிராஃப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜீனியர்ஸ் அப்பிரடென்ஷிப் மற்றும் ஐ ஐ டி உடனான நேஷனல் ஏரோமாடலிங் போட்டி போன்ற பிற திட்டங்களின் மூலம் நாட்டில் திறன் மேம்பாடு மற்றும் திறனை வளர்ப்பதற்கு போயிங் இந்தியா உதவி வருகிறது.

# சென்னை பெருநகர போக்குவரத்து காவல் - நீங்க ரோடு ராஜாவா ? குறும்படம் வெளியிடப்படுகிறது







சென்னை, 14 பிப் 2024: சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சென்னை எல்லைக்குட்பட்ட சாலைகளில் பாதுகாப்பான மற்றும் விரைவான பயணத்தை உறுதிசெய்யவும், யு திருப்பங்கள், ஒரு வழிப்பாதை, புதிய வேக வரம்புகள், பள்ளி பாதுகாப்பு மண்டலங்கள் போன்ற பல்வேறு முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு முயற்சிகள் காரணமாக, ஜி சி டி பி தனது பகுதிகளில் விபத்துகளில் அளவை குறைத்து வருகிறது.

போக்குவரத்து வழக்குகள் பதிவு செய்வதின் மூலமாகவும் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் போன்ற பல்வேறு முன்முயற்சிகள் மூலமாகவும் மரண விபத்துக்கள் அதிகரிக்காமல் இருப்பதை ஜி சி டி பி உறுதி செய்கிறது. 2023-ல் வாகன விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய குறைவான விபத்தினை தக்கவைத்துள்ள ஒரே பெருநகரம் சென்னை மட்டுமே. மேலும் சாலை விபத்துகளால் அதிகமாக இறப்பவர்களின் விகிதத்தில் 1வது இடத்திலிருந்து 4வது இடத்திற்குக் கீழே இறங்கியுள்ளது.

பொதுமக்களுக்கு போக்குவரத்தை பற்றி மேலும் அறிவூட்டும் வகையில், ஜி சி டி பி உடன் ஒருங்கிணைந்து திரைப்பட இயக்குனரான விக்னேஷ் சிவன் அவர்கள் இயக்கிய சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறும்படம் "நீங்க ரோடு ராஜா வா" 14.02.2024 அன்று சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறையால் வெளியிடப்பட்டது. போக்குவரத்து விதிகளை மதிக்காமல் வாகன ஓட்டிகள் தவறான வழிகளிலிருந்து வாகனத்தை இயக்குவது குறித்த விழிப்புணர்வும் (ராங் சைட் டிரைவிங்), ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டுவதையும் தடுக்கும் வகையில் இந்த வீடியோ உள்ளது. இதேபோல், போக்குவரத்து விதிகளை பின்பற்றுவதற்கான நுண்ணறிவுகளை வழங்கும் மற்றொரு வீடியோவும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு குறும்படத்தில் நடித்துள்ள நடிகர்கள் யோகி பாபு, சாந்தனு பாக்யராஜ், பகவதி பெருமாள், அர்ச்சனா, அப்துல் லீ மற்றும் அனைத்து நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் ஜி சி டி பி தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

2021 ஆம் ஆண்டில் சென்னை பெருநகரில் விபத்தின் இறப்பு எண்ணிக்கை 573 ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 204 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் தலைகவசம் அணியாமல் வாகனம் ஓட்டியதால் 279 பேர் உயிரிழந்துள்ளனர். இது 50% ஆகும். கடந்த ஆண்டு 2023ல், இது 196 ஆக குறைக்கப்பட்டு 38% ஆக குறைந்துள்ளது.

தவறான பாதையில் வாகனம் ஓட்டுவது (ராங் சைட் டிரைவிங்) தொடர்பாக சிறப்பு நடவடிக்கையாக 2023ஆம் ஆண்டில் விதிமீறல் செய்பவர்கள் மீது மொத்தம் 60,181 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரை, சாலைப் பாதுகாப்பு நிகழ்ச்சிகள் இந்த ஆண்டு சென்னை பெருநகரம் முழுவதும் 100 பள்ளிகளில் நடத்தப்பட்டுள்ளன. இதில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சுமார் 7200 மாணவர்களை சென்றடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மகேஷ் குமார் காவல் இணை ஆணையாளர், போக்குவரத்து தெற்கு, வி. பாஸ்கரன், காவல்துறை துணை ஆணையாளர், போக்குவரத்து, கிழக்கு மாவட்டம், பி.குமார் காவல் துணை ஆணையாளர், போக்குவரத்து வடக்கு மாவட்டம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
புதன்கிழமை,
பிப்ரவரி 14, 2023

# ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து ராஜ்யசபா எம்.பி. பதவிக்கு சோனியா வேட்பு மனு தாக்கல்



சென்னை, 14 பிப் 2024: ராஜ்யசபா தேர்தலில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து சோனியா காந்தி போட்டியிட இன்று வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

ராஜ்யசபா தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் வேட்பாளர்கள் பட்டியலை அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இன்று வெளியிட்டுள்ளார்.

அதில் ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து ராஜ்ய சபா உறுப்பினர் வேட்பாளராக சோனியா காந்தி போட்டியிடுகிறார். இதேபோல் பீகார் மாநிலத்திலிருந்து அகிலேஷ் பிரசாத் சிங், இமாச்சல பிரதேசத்திலிருந்து அபிஷேக் மனு சிங்வி, மகாராஷ்டிராவிலிருந்து சந்தரகாந்த் ஹந்தோர் ஆகியோர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஜெய்ப்பூர் சென்ற சோனியா காந்தி, அங்குள்ள சட்டசபை வளாகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். இந்த நிகழ்ச்சியில் பிரியங்கா காந்தி, ராகுல், முன்னாள் முதலமைச்சர் அசோக் கெலாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சோனியா ராஜ்யசபா தேர்தலில் போட்டியிடுவது உறுதியானதால், ரேபரலி அல்லது அமேதி மக்களவை தொகுதியில் பிரியங்கா போட்டியிடலாம் என தெரிகிறது.

கடந்த 1997 டிசம்பரில் சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அவர் கட்சியில் சேர்ந்த சில மாதங்களில் காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 2017ம் ஆண்டு கட்சித் தலைவர் பதவியில் இருந்து அவர் விலகினார். அவரது மகன் ராகுல் காந்தி புதிய தலைவராக பதவியேற்றார்.

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சென்னை பெருநகர காவல் துறை நடத்தும் குதிரையேற்ற போட்டிக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையை காவல் ஆணையாளரிடம் வழங்கினார்



சென்னை, 14 பிப் 2024: சென்னை குதிரைப்படை 1780ம் ஆண்டு, சென்னை மாகான ஆளுநர் திரு.வில்லியம் லாங்கன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவரது பாதுகாப்பு பணிக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் 1800ம் ஆண்டு முதல் இப்படையில் உள்ள குதிரைகள் சென்னை காவல் கண்காணிப்பாளர் திரு.வால்டர் கிராண்ட் அவர்களால், சென்னை காவல்துறைக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன் பிறகு 1926ம் ஆண்டு முதல் சென்னை காவல் குதிரைப்படை ஒரு சார்ஜன்ட் தலைமையில் ஒரு தனிப்பிரிவாக ஆரம்பிக்கப்பட்டு, சென்னை காவல் ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன் பிறகு சென்னை காவல் குதிரைப்படையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது, சென்னை பெருநகர காவல் குதிரைப்படை எழும்பூரில் இயங்கி வருகிறது. சென்னை பெருநகர காவல் துறை, குதிரைப்படைபிரிவை மேம்படுத்தவும், போதை பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முதல் குதிரையேற்ற போட்டியை வருகின்ற 23.02.2024 முதல் 25.02.2024 வரை சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைச்செயலகத்தில் மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டச்செயலாக்கத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மேற்படி குதிரையேற்ற போட்டி ஏற்பாடுகளுக்காக சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட ரூ.5 லட்சத்திற்கான காசோலையை சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.சந்தீப் ராய் ரத்தோர், இ.கா.ப அவர்களிடம் வழங்கினார்.

# எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் நிறுவனம், 6 வது பசுவிகாஸ் தினத்தில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கிறது, பால் பண்ணை தொழில் செய்யும் பெண்களை கவுரவிக்கிறது



சென்னை, 14 பிப் 2024: இந்தியாவின் முன்னணி பூிநிதிசிக்களில் ஒன்றான எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் கோ. லிமிடெட் (முன்பு ஃபுல்லர்டன் இந்தியா கிரெடிட் கோ. லிமிடெட்), தங்களின் நாடு முழுவதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஒரு நாள் கால்நடை பராமரிப்பு முகாமான 6 வது பசுவிகாஸ் தினத்தை (பி வி டி) நடத்தியது. இந்த முகாம்கள் 14 மாநிலங்களில் உள்ள 460 க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டன மேலும் 1 இலட்சத்துக்கும் அதிகமான கால்நடைகளுக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகள் வழங்கப்பட்டன. இந்தியாவில், 8 கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் பால் துறையுடன் நேரடியாக தொடர்புடையவை மற்றும் 70% தொழிலாளர்களில் பெண்கள் அடங்குகின்றனர். இந்த பெண்களின் முயற்சிகளை நினைவுகூரும் வகையில், 6வது பசுவிகாஸ் தினம் 'பால் பண்ணைத் தொழிலில் பெண்கள்' என கொண்டாடப்பட்டது. இந்த முன்முயற்சியானது, இ எஸ் ஜி கட்டமைப்பிற்குள் உள்ள, பாலின பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற மற்றும் சமூக மேம்பாட்டிற்கு ஊக்கமளிக்கின்ற 'சமூக' அம்சத்தை பிரதிபலிக்கிறது. 600 நகரங்கள் மற்றும் 65,000க்கும் மேற்பட்ட கிராமங்களில் இந்தியா முழுவதும் உள்ள வாடிக்கையாளர் தளத்தை அவர்கள் பூர்த்தி செய்வதால், இந்த நிறுவனத்தின் பலதரப்பட்ட பணியாளர்கள் குழு ஒரு மூலோபாய உதவியாளர் ஆக இருக்கிறது. கடன் வழியாக கனவுகளுக்கு நிதியளிப்பதன் மூலமும், அவர்கள் செயல்படும் உள்ளூர் சமூகங்களில் சிறந்த வாழ்வாதாரத்திற்காக கிராமப்புற இந்தியாவை மேம்படுத்துவதன் மூலமும் ஒரு ஒட்டுமொத்த உள்ளடக்கிய சுற்றுச்சூழல் அமைப்பை உறுதி செய்வதில் அவர்களின் கவனம் உள்ளது

கால்நடை பராமரிப்பு தவிர, எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட், 2024 பிப்ரவரி 4 முதல் பிப்ரவரி 10 வரை நாடு முழுவதும் உள்ள சமூகத்திற்காக, 30,000 க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைகின்ற வகையில் 300 க்கும் மேற்பட்ட உடல்நல பாதுகாப்பு முகாம்களையும் ஏற்பாடு செய்தது. 6 வது பசு விகாஸ் தினம் 1,25,000 க்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கைகளில் முழுவதும் சென்றடைந்து விளைவு ஏற்படுத்தியது.

பசுவிகாஸ் தினமானது, இந்த முயற்சியை முன்னெடுப்பதற்காக ஒரே நாளில் தாமாக முன்வந்து ஒன்றிணைந்த நாடு முழுவதும் உள்ள 4000-க்கும் மேற்பட்ட ஊழியர்களின் தீவிரமான பங்கேற்பையும் கண்டது.

நிறுவனத்தின் சமூக முன்முயற்சிகள் பற்றி பேசிய எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குனர் திரு. ஷாந்தனு மித்ரா, "எங்கள் கிராமப்புற வாடிக்கையாளர்களில் 90% க்கும் அதிகமானோர் பெண்களாக இருக்கிறார்கள். எங்கள் வாடிக்கையாளர்களில் பலர் அவர்களுக்கு பெரிய வருமான ஆதாரமாக உள்ள கால்நடைகளை வாங்குவதற்கு கடன் வாங்குகிறார்கள். எங்கள் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மாற்றத்திற்கான ஊக்கியாக செயல்படுகின்றன மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகின்ற மற்றும் வருமான வழிகளை உயர்த்துகின்ற வகையில் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன, கால்நடை நலனைத் தாண்டி, நாங்கள் சேவை செய்யும் சமூகங்களின் முழுமையான நல்வாழ்வுக்கு பங்களிக்கின்ற திறன் மேம்பாடு மற்றும் நிதி கல்வியறிவை தீவிரமாக ஊக்குவிக்கின்றோம். எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இல், புதுமையான மற்றும் நிலையான சமூக-பொருளாதார முன் முயற்சிகள் மூலம் பின்தங்கிய சமூகங்களில் உள்ளடங்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்களுடன் ஒரு வலுவான தொடர்பை ஏற்படுத்த நாங்கள் அர்ப்பணித்துள்ளோம்." என்று கூறினார்.

பசுவிகாஸ் தினம் பற்றி கருத்து தெரிவிக்கையில், எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இன் தலைமை இயக்க அதிகாரி திரு சுவாமிநாதன் சுப்ரமணியன், "எஸ் எம் எஃப் ஜி இந்தியா கிரெடிட் இல், கிராமப்புற மேம்பாட்டிற்கான எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் வலுவான சமூக முன்முயற்சிகளை வெற்றி பெறுவதற்கான எங்கள் நோக்கத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஒரு முன்னணி கடன் வழங்குநராக, எங்கள் சமூக நலன் சார்ந்த செயல்பாடுகள், உள்ளடக்கிய திட்டங்கள் மற்றும் ஒற்றுமையுடன் செயல்படும் ஒரு பலதரப்பட்ட பணியாளர்கள் மூலம் இ எஸ் ஜி இன் 'சமூக' அம்சத்தைப் பயன்படுத்த நாங்கள் விரும்புகிறோம்.

இதைக் கருத்தில் கொண்டு, பசுவிகாஸ் தினம் குறிப்பாக கிராமப்புறங்களில் கால்நடைகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்களின் தனிப்பட்ட சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கால்நடை உரிமையாளர்களின் அபிலாஷைகளை வலுப்படுத்துகிறது மற்றும் கால்நடை உற்பத்தியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது, தொடர்ந்து வீட்டு வருமானத்தை உயர்த்துகிறது. எங்களின் கவனம் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் அதிகாரமளித்தல் மற்றும் மேம்பாடு ஆகியவற்றை எளிதாக்குகின்ற வகையில் பின்தங்கியவர்களுக்கு ஆதரவை நிலையாக விரிவுபடுத்துவதில் இருக்கும்." என்று கூறினார். பசுவிகாஸ் தினம், பால் பண்ணை துறையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை உருவாக்குவதற்கும் நிலையான நடைமுறைகளை வளர்ப்பதற்கும் நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆண்டு, வேர்ல்டு ரெகார்ட்ஸ் யூனியன் உடன் நாடு முழுவதும் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஒரு நாள் கால்நடை பராமரிப்பு முகாம்களுக்கான ஒரு புதிய சாதனையை இந்த நிறுவனம் படைத்துள்ளது. கடந்த சில பதிப்புகளில், பி வி டி ஆனது 2015 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் ஏற்பாடு செய்யப்பட்ட மிகப்பெரிய ஒற்றை நாள் கால்நடை பராமரிப்பு முகாமிற்காக லிம்கா புத்தகத்தில் இடம்பெற்றது, 2018 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய ஒற்றை நாள் கால்நடை பராமரிப்பு முகாமாக பெஸ்ட் ஆஃப் இந்தியா ரெக்கார்ட்ஸ் மற்றும் 2019 இல் மிகப்பெரிய கால்நடை பராமரிப்பு முகாமிற்காக வேர்ல்டு புக்ஸ் ஆஃப் ரெக்கார்ட்ஸ் இல் இடம்பெற்றது.

# வலுவான வருவாய் மற்றும் வரிக்குப் பிந்தைய லாபத்தை பதிவு செய்திருக்கும் சலசார் டெக்னோ இன்ஜினியரிங்



சென்னை, 14 பிப் 2024: பொறியியல் மற்றும் உட்கட்டமைப்பு தீர்வுகளை வழங்கும் துறையில் ஒற்றை நிறுத்த தீர்வு வழங்குனராக சலசார் டெக்னோ இன்ஜினியரிங் லிமிடெட், முன்னணி நிறுவனமாக இயங்கி வருகிறது. ரயில்வே மற்றும் ஆற்றல் வழங்கல் துறைகளுக்கு டர்ன்கீ இபிசி சேவைகளை வழங்குவதில் இந்நிறுவனம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அத்துடன், தொலைத்தொடர்பு டவர்களை வடிவமைத்து தயாரித்து வழங்கும் பணியையும் இது செய்து வருகிறது. 2023 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் 9 மாதங்கள் காலஅளவிற்கான தனது வருவாய் உட்பட, நிதிசார் முடிவுகளை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. நிதியாண்டு 23-ன் கியூ3 - ல் ரூ.2408.0 மில்லியனாக இருந்த இந்நிறுவனத்தின் இயக்க வருவாய் 26.2% உயர்ந்து, கியூ3எஃப்ஒய்24 - ல் ரூ.3038.8 மில்லியனாக வளர்ச்சி கண்டிருக்கிறது. நிதியாண்டு 23-ன் 9 மாத காலஅளவிற்கான இயக்க வருவாய் ரூ.7102.0 மில்லியன் என்பதிலிருந்து, 18.4% வளர்ச்சி கண்டு ரூ.8411.0 மில்லியனாக பதிவாகியிருக்கிறது. மேலும், எஃப்ஒய்23 கியூ3 - ல் ரூ.240.6 மில்லியனாக இருந்த ஈ பி ஐ டி டி ஏ, 55.7% என்ற சிறப்பான வளர்ச்சியினை பதிவுசெய்து எஃப்ஒய்24 கியூ3 - ல் ரூ.374.6 மில்லியனாக உயர்ந்திருக்கிறது. இயக்க செயல்பாடுகளின் வளர்ச்சியின் காரணமாக எஃப்ஒய்24 - ன் 9 மாத காலஅளவில் ரூ.859.6 மில்லியனாக பதிவாகியிருக்கிறது. இதுவே, எஃப்ஒய்23 - ல் 619.6 மில்லியனாக இருந்தது. குறிப்பாக, கியூ3 எஃப்ஒய்23 - ல் 10.0% ஆக இருந்த ஈ பி ஐ டி டி ஏ லாப வரம்பு 230 பி பி எஸ் என்ற சிறப்பான வளர்ச்சியை வெளிப்படுத்தி, கியூ3 எஃப்ஒய்24 - ல் 12.3% ஆக பதிவாகியிருக்கிறது.

அதைப்போலவே, 9எம் எஃப்ஒய்23 - ல் 8.7% ஆக இருந்த இது, 152 பி பி எஸ் உயர்ந்து, 9எம் எஃப்ஒய்24 - ல் 10.2% ஆக பதிவாகியிருக்கிறது. வரிக்குப் பிந்தைய லாபம் (பி ஏ டி), கியூ3 எஃப்ஒய்24 -ல் 56.8% வளர்ச்சிப் பதிவுடன் ரூ. 167.5 மில்லியனாக உயர்ந்திருக்கிறது; 9எம் எஃப்ஒய்24 - ல் இதுவே 41.0% உயர்ந்து, ரூ. 359.6 மில்லியனாக பதிவாகியிருக்கிறது. பி ஏ டி லாப வரம்புகள் முறையே 112 பி பி எஸ் மற்றும் 68 பி பி எஸ் என்ற வளர்ச்சியுடன் கியூ3 எஃப்ஒய்24 - ல் 5.5% ஆகவும் மற்றும் 9எம் எஃப்ஒய்24 - ல் 4.3% ஆகவும் உயர்ந்திருக்கின்றன. கியூ3 எஃப்ஒய்24 - ல் நிறுவனத்தின் சிறப்பான செயல்பாடு குறித்து எஸ் டி ஈ எல் - ன் நிர்வாக குழுவினர் கூறியதாவது: "இக்காலாண்டின்போது எமது ஆர்டர் புக்கில் கணிசமான செயல்திட்டங்களை நாங்கள் வெற்றிகரமாக சேர்த்திருக்கிறோம்; உட்கட்டமைப்பு தீர்வுகள் மற்றும் பொறியியல் துறையில் வளர்ச்சி கண்டு வரும் எமது இருப்பினை இது நேர்த்தியாக பிரதிபலிக்கிறது. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் வினியோக கார்ப்பரேஷன் லிமிடெட் (டாண்ஜெட்கோ) - இடமிருந்து ரூ.3640 மில்லியன் மதிப்புகள் ஒரு பெரிய இபிசி ஒப்பந்தத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஃபீடெர் பிரிப்பு சாதனங்களுக்கான சப்ளை, கட்டுமானம் மற்றும் நிறுவல் மற்றும் உயர் வோல்டேஜ் வினியோக அமைப்பு, இரட்டை வினியோக டிரான்ஸ்ஃபார்மர் பிரிப்பு, 33 கேவி லைன்களின் மேம்பாடு ஆகியவை உட்பட, முழுமையான இபிசி தீர்வை வழங்குவது இந்த ஒப்பந்த பணிகளுள் உள்ளடங்கும். இந்த ஆர்டரை வெற்றிகரமாக பெற்றிருப்பதில் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான செயல்திட்டங்களை வெல்வது மீதான எமது திறனையும், அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கிறது. அதுமட்டுமின்றி, நுட்பமான மின்சார உட்கட்டமைப்பு முன்னெடுப்புகளுக்கு தொடக்கம் முதல், இறுதிவரை முழுமையான தீர்வுகளை வழங்கும் எமது திறனையும், அனுபவத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது. இதன் விளைவாக, 2023 டிசம்பர் 31 அன்று எமது ஆர்டர் புக்கின் மதிப்பு ரூ.23259 மில்லியனாக உயர்ந்து வலுவான இடத்தில் இருக்கிறது.